# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபை (திருத்தச்) சட்டம்

---

*(2003 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2003, ஒற்றோபர் மாதம் 17 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 4.50**

## 2003 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபை (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ-ஓ 15/99

## தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2003 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (ஔ) என்னும் பந்தியிலுள்ள "கட்டுப்படுத்தல், அத்துடன் நெறிப்படுத்தல் ; அத்துடன்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "கட்டுப்படுத்தல் அத்துடன் நெறிப்படுத்தல் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (க) என்னும் பந்தியிலுள்ள "அவசியமான இணைப்பை ஏற்படுத்தல்," என்ற சொற்களுக்குப் பதிலாக, "அவசியமான இணைப்பை ஏற்படுத்தல்;" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (க) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(ங) இச்சட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட வேறுபட்ட செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்களைக் கொண்டுள்ள கையேடுகளை ஆக்குதல் ;

(ச) இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ சபையின் குறிக்கோள்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ கொண்டுள்ள வேறு நிறுவனங்களோடு, அவற்றின் பொதுக் குறிக்கோள்களை மேலும் முன்னேற்றுவதற்காக, கூட்டுறவுக்கான உடன்படிக்கைகளைச் செய்தல் ;

(ஞ) தேயிலைக் கைத்தொழிலுடன் தொடர்புற்ற கொள்கைகள்மீது அமைச்சருக்கு மதியுரை வழங்குதல் ;

(ட) தேயிலைக் கைத்தொழிலில் முதலீட்டை மேம்படுத்துதல் ; அத்துடன்

(ண) தேயிலைக் கைத்தொழில் தொடர்பான தரவுகளைச் சேகரித்தலும் பரப்புதலும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) சபையானது –

(அ) அமைச்சரால் நியமிக்கப்படும் ஓர் ஆளைக் கொண்டிருத்தல் வேண்டும் ; இவர் சபையின் தவிசாளராக இருத்தல் வேண்டும் ; (இவர் இதனகத்துப்பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) ; அத்துடன்

(ஆ) அமைச்சரால் நியமிக்கப்படும் பின்வரும் பெயர் குறித்த நியமன உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவிருக்கின்ற அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவ

ரான அவ்வமைச்சரின் அமைச்சுப் பிரதிநிதியொருவர் ;

(ii) வியாபாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவிருக்கின்ற, அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவரான, அவ்வமைச்சரின் அமைச்சுப் பிரதிநிதியொருவர் ;

(iii) பெருந்தோட்டத்துறைக் கைத்தொழில்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவிருக்கின்ற அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவர்களான, அவ்வமைச்சரின் அமைச்சுப் பிரதிநிதிகள் இருவர் ;

(iv) தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதிநிதியொருவர், அவ்வதிகார சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்படுவார் ;

(v) தனியார் தேயிலைத் தொழிற்சாலை சொந்தக்காரரர் கழகத்தின் பிரதிநிதியொருவர், அச்சங்கத்தினால் இலங்கைத் தேயிலைச் சங்கத்தின் (இ.தே.ச.) கலந்தாலோசனையுடன் பெயர்குறித்து நியமிக்கப்படுவார் ;

(vi) இலங்கைத் தோட்டத்துரைமார் சங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்-291) கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கைத் தோட்டத் துரைமார் சங்கத்தின் பிரதிநிதியொருவர், அச்சங்கத்தினால் இலங்கைத் தேயிலைச் சங்கத்தின் (இ.தே.ச.) கலந்தாலோசனையுடன் பெயர்குறித்து நியமிக்கப்படுவார் ;

(vii) இலங்கைத் தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்திச் சங்கங்களின் சம்மேளனத்தின் பிரதிநியொருவர், அச்சம்மேளனத்தால் இலங்கைத் தேயிலைச் சங்கத்தின் (இ.தே.ச.) கலந்தாலோசனையுடன் பெயர் குறித்து நியமிக்கப்படுவார் ;

(viii) தேயிலை ஏற்றுமதியாளர் சங்கத்தின் பிரதிநிதியொருவர், அச்சங் கத்தினால் இலங்கைத் தேயிலைச் சங்கத்தின் (இ.தே.ச.) கலந்தாலோச னையுடன் பெயர்குறித்து நியமிக்கப் படுவார் ;

(ix) கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் பிரதிநிதியொருவர், அச்சங்கத்தினால் இலங்கைத் தேயிலைச் சங்கத்தின் (இ.தே.ச.) கலந்தாலோசனையுடன் பெயர் குறித்து நியமிக்கப்படுவார் ;

(x) கொழும்புத் தரகர்கள் சங்கத்தின் பிரதிநிதியொருவர், அச்சங்கத் தினால் இலங்கைத் தேயிலைச் சங்கத்தின் (இ.தே.ச.) கலந்தாலோ சனையுடன் பெயர்குறித்து நியமிக் கப்படுவார் ;

(xi) பெருந்தோட்டக் கைத்தொழில்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப் பான அமைச்சரால், தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய கட்டளைக்கல் மீது தெரிவு செய்யப்பட வேண்டிய தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு உறுப்பினர்கள்.

இப்பந்தியின் நோக்கத்திற்காக தொழிற்சங்கம் என்பது தொழிற் சங்கக் கட்டளைச் சட்டத்தில் (அத்தியாயம் 138) உள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்."

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(3) சபையின் தவிசாளரும் மற்றும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்களும் ஐந்து ஆண்டுக் காலமொன்றிற்குப் பதவிவகித்தல் வேண்டும் ; ஆனால், அவர்கள் மீளவும் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்குத் தகவுடையோராயிருத்தல் வேண்டும்." ;

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவிலுள்ள "பிரதமரின் ஒருப்பாட்டுடன்" என்ற சொற்களை விட்டுவிடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவிலுள்ள "பிரதமரின் ஒருப்பாட்டுடன்" என்ற சொற்களை விட்டுவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(5) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவிலுள்ள "பிரதமரின் ஒருப்பாட்டுடன்" என்ற சொற்களை விட்டுவிடுவதன் மூலமும்.

நிலை பெயர்கால ஏற்பாடு.

**4.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முந்திய நாளன்று பதவி வகித்துவரும் சபையின் உறுப்பினர்கள், இச்சட்டத்தால் திருத்தப் பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவின்கீழ்ச் சபையானது மீள அமைத்துருவாக்கப்படும் வரையிலான அத்தகைய காலத்திற்கு அத்தகையவாறு பதவிகளைத் தொடர்ந்தும் வகித்து வருதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்